PW 1- திரு.மோகன் பிரபு

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) தனியாக பைனானஸ் நிறுவனம் நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. நான் புகார் தாரர் என்ற நிலையில் சமூகம் நீதிமன்றத்தில் 10 காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 7 வழக்குகள் தாக்கல் செய்திருப்பேன். அனைத்து வழக்குகளும் வரவு செவில் பணம் கொடுத்து கடன் திரும்ப கொடுக்காததால் தாக்கல் செய்யப்பட்டடவழக்கு என்றால் சரிதான். நான் வட்டிக்கு பணம் கொடுப்பதற்காக பல்லடம் வாட்டாட்சியரிடம் உரிம சான்றிதழ் பெற்றுள்ளேனா என்றால் நான் ஆடிட்டர் வைத்து முறையாக சான்றை 2023 ஆம் வருடம் 10 வது மாதம் உரிமம் பெற்றுள்ளேன். நாங்கள் நான்கு பேர் சேர்ந்து நிறுவனம் நடத்துகிறோமா என்றால் இரண்டு போர் சேர்ந்து நடத்துகிறோம். அந்த நிறுவனத்தின் பெயர் என்ன என்றால் வாழ்க வளமுடன் பைனான்ஸ் சர்வீஸ்.

2) இந்த நிறுவனத்தின் இருப்பிடம் எங்கு ள்ளது என்றால் கொடுவாய் ஈஸ்வரன் கோவில் வீதி VV காம்பளக்ஸ்ஸில் உள்ளது. 2023 ஆம் வருடத்தில் இருந்து நான் யாருக்கு பணம் கொடுத்தாலும் முறையாக ஆடிட்டர் வைத்து வருமான வரியில் தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். அறிக்கையில் பார்த்தால் நான் யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் எவ்வளவு வட்டி வசூல் பெற்றேன் என்ற விவரம் தெரியுமா என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்த பணம் பற்றி ஆடிட்டர் அறிக்கையை பார்த்தால் தெரிய வரும் என்றால் அந்த தேதியில் நான் பைனான்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கவில்லை நான் பழக்க வழக்கத்தின் அடிப்படையில் கொடுத்தேன்.

3) வருமான வரி கணக்கு ஆண்டானது ஏப்ரல் முதல் அடுத்த வருடம் மார்ச் என்பது

எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அப்படி இருந்தால் 2023 ஆம் தேதி மே மாதம் நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்ததை நான் வருமான வரி கணக்கில் காண்பித்திருப்பேன் என்றால் நான் அந்த விவரத்தை வருமான வரி கணக்கு விபரத்தில் காண்பிக்கவில்லை. ஒரு நபருக்கு ரூ.இருபதாயிரத்திற்கு மேல் ரொக்கமாக கொடுக்க கூடாது என்று வருமான வரி சட்டத்தில் உள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.எனக்கு தெரியும் நான் வழக்கிற்காக தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4) எதிரிக்கு பணம் குடத்ததாக கூறியிருப்பது வங்கி மூலமாக அல்லது வேறு வழியிலா என்றால் எனக்கு வீட்டு வாடகை மற்றும் கட்டிங் கான்டரக்ட் போட்டதன் மூலம் வந்த வருமானத்தின் அடிப்படையில் கொடுத்தேன். ரூ. மூன்று லட்சத்தை நான் 2000 தாள்களாக கொடுத்தேனா என்றால் 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். நான் பணத்தை எண்ணிதான் கொடுத்தேனா என்றால் சரிதான். என்னிடம் பணம் வாங்கும்போது எதிரி அவர் மட்டும் வந்தாரா அல்லது அவரது மனைவியுடன் வந்தாரா என்றால் அவர் மனைவியுடன் வந்தார். ப்ரோ நோட் எனது வீட்டில் இருந்துதான் எடுத்துக்கொண்டுவந்தேனா என்றால் எதிரி அவரே கொண்டு வந்தார். அவருக்காக சாட்சி கையொப்பம் போட யாரையாவது கூட்டி வர சொன்னேனா என்றால் சொன்னேன் ஆனால் யாரையும் அவர் கூட்டி வரவில்லை. சாட்சி கையொப்பம் போட்ட இரண்டு நபர்களும் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் சரிதான்.

5) சீனிவாசன் என்பவர் நான் கடன் கொடுக்கும் நபர்களுக் ப்ரோ நோட் எழுதிக் கொடுப்பவர் என்றால் அப்படி இல்லை. நான் கேட்டுக்கொண்டதற்கு இனங்க அவர் அந்த ப்ரோ நோட்டை பூர்த்தி செய்தார் என்றால் சரிதான். அரசாங்கம் அதிகபட்சமாக 18 % வட்டி போட்டு வசூலிக்க வேண்டும் என்று தான் கூறியுள்ளது என்றாலும் அதற்கு மேல் வட்டி வசூலித்தால் கந்து வட்டி சட்டத்தின் கீழ் தவறான செயலாகும் என்றால் சரியல்ல.

ஸ்டேம்ப்பை யார் ஒட்டினார் என்றால் எதிரி தான் ஒட்டினார். எதிரி எனக்கு எத்தனை மாதங்களாக வட்டி கொடுத்தார் என்றால் வட்டி தரவில்லை. எனக்கு முழுமையாக வட்டி தரவில்லை என்று வழக்கிலோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 12.04.2024 ஆம் தேதி எதிரியை நான் அவர் வீட்டுக்கு சென்று அவரை வட்டி தரவில்லை என்று சொல்லியும் கெட்ட வார்த்தை சொல்லி திட்டியும் மற்றும் அடித்து அதன் பேரில் அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் குற்ற 147/2024 என்ற வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் ஜாமீன் பெறவில்லை என்றால் என்னை காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்கள். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

6) அந்த வழக்கில் புகார் கொடுக்க முற்பட்டபோது புகார் கொடுக்க வேண்டாம் என்று நான் சமாதானம் பேசினேன் என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டுதான் நான் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். காசோையை யார் எழுதியது என்றால் எதிரி தான் எழுதினார். காசோலையில் எதிரி பெயரில் இரண்டு கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு கையொப்பமும் வெவ்றான மையினால் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் கையொப்பம் என்று போட்டுக்கொடுத்தார் என்றால் 02.04.2024 ஆம் தேதியிட்டு அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே ஒரு கையொப்பம் போட்டு காசோலை கொடுத்துவிட்டார். அந்த காசோலையை நான் என்னுடைய வங்கியான கரூர் வைசியா வங்கி கொடுவாய் கிளையில் காண்பித்தபோது அவர்கள் காசோலையின் கீழே கையொப்பம் போடப்பட்டுள்ளது எனவே மேலே ஒரு கையொப்பம் வாங்கி வர வேண்டும் அப்போது தான் காசோலை வசூலுக்கு போட முடியும் என்று கூறினார்கள். அதனால் நான் இரண்டாவது கையொப்பம் எந்த நாளில் எதிரியிடம் பெற்றேன் என்றால் சண்டை நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு

பெற்றேன்.

7)இரண்டாவது கையொப்பத்தை நான் எதிரியிடம் எங்கு வைத்து பெற்றேன் என்றால் அவரது வீட்டில் வைத்து பெற்றேன். இரண்டு கையொப்பத்தில் உள்ள மைகளுக்கும் சம்மந்தமில்லாமல் காசோலையில் உள்ள தேதி, பெயர் மற்றும் தொகைகள் வேறு ஒரு மையினால் எழுதப்பட்டது என்றால் சரிதான், ஆனால் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது, கையொப்பத்தை எதிரி தான் போட்டார். எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியதில் ப்ரோ நோட்டை நான் தான் எழுதி கொடுத்தேன்என்றும் ஆனால் காசோலைகள் State Bank of India தென்னபாளையம் கிளையில் வரையப்பட்ட 5 காசோலைகள் 984334,984335,984336,984337,984338 ஆகிய எண்கள் உள்ள காசோலையை கொடுத்ததாகதான் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. எந்த இடத்திலும் அவரது அறிவிப்பில் காசோலைகளை நிரப்பட்டு அவர் கையொப்பம் செய்து கொடுத்ததாக கூறவில்லை என்றால் சரியல்ல. கொடுக்கப்பட்ட காசோலைகள் அனைத்தும் வெற்று காசோலைகள் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.03.05 17:03:57 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.